# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.89 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | குமரன் |
| Father/Husband Name | ஏகாம்பரம் |
| Calling/Occupation | கூலி |
| Age | 26 |
| Address | சின்னபாலம்பாக்கம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.01.2026.

(A1 to A3 Present)

**முதல் விசாரணை**

நான் சின்னபாலம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் ராகவேந்திரா புரூட் ஜூஸ் கடையில் வேலை செய்கிறேன். அந்த கடையில் உரிமையாளர் செல்வகுமார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர் கடையில் நான்கு ஆண்டுகளாக நான் வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் செல்வகுமாரின் கடையில் கார்த்திக், தாஸ், மற்றொரு கார்த்திக், ஏழுமலை, குமரன் ஆகியோர் வேலை செய்தோம்.

கடந்த 25.05.2023 அன்று இரவு 07.00 மணிக்கு பழக்கடையில் நான், தாஸ், ஏழுமலை, கார்த்திக், மற்றொரு கார்த்திக் ஆகியோர்கள் இருந்தோம். எங்கள் கடைக்கு தெற்கு பக்கத்தில் ஆஜர் எதிரிகள் மூவரும் குடித்துக்கொண்டு சத்தம் போட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நானும், கார்த்தியும் போய் ஆஜர் 1ம் எதிரியிடம் ஏன் இவ்வளவு நேரம் குடித்துக் கொண்டு சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு எங்களை எதிரிகள் மூவரும் கோத்தா, கொம்மா நீ யாருடா கேட்பதற்கு என்று எங்களை திட்டினார்கள்.

அதன் பின்னர் எங்கள் கடையின் உரிமையாளர் செல்வகுமாரும் வந்தார். அவரும் வந்து எதிரிகளிடம் கேட்டபோது அவரையும் எதிரிகள் அசிங்கமாக திட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அப்போது எங்களுக்குள் தள்ளுமுள்ளு நடந்தது உண்மைதான். அதன் பின்னர் 26.05.2023 அன்று விடியற்காலை 02.45 மணிக்கு கோபி கார்த்திக் என்பவர் முதலில் வந்தார், அவருடன் மகஷே மற்றும் மதன் ஆகிய இரண்டு எதிரிகள் வந்தார்கள். எதிரி கோபி கார்த்திக் பழம் அறுக்கும் கத்தியால் என்னை தலையிலும் இடது பக்க வயிற்றிலும் கிழித்துவிட்டார். உடன் வந்த இரண்டு ஆஜர் எதிரிகளும் என்னை கையால் அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உரிமையாளர் செல்வகுமாரை அசிங்கமாக திட்டி நீ தானடா தெவிடியா பையா என்னை அடிக்க வந்தாய் என்று

சொல்லிவிட்டு அவரை இடது பக்க தோள்பட்டை, வலது மார்பு, இடுப்பு ஆகிய இடங்களில் குத்திவிட்டு உங்களை உயிருடன் விடமாட்டேன் எங்களிடம் சண்டைக்கு வந்தால் என்று சொல்லிவிட்டு அசிங்கமாக திட்டிவிட்டு போய்விட்டார்கள். எங்களை குத்த பயன்படுத்திய கத்தி என்னிடம் காண்பிக்கப்படும் கத்திதான். அந்த **கத்தி சா.பொ.1** ஆகும். கடையில் இருந்தவர்கள் ரோட்டில் போனவர்கள் வந்தவர்கள் எங்களை அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள். அங்கு போலீசார் வந்து விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன். அதை எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அடிப்பட்டு இருந்த என்னை என் தம்பி கஜேந்திரன்தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் இல்லை. மருத்துவமனைக்கு நான் எத்தனை மணிக்கு போய் சேர்ந்தேன் என்றால் இரவு சுமார் 03.00–03.15 மணி இருக்கும். போகிற வழியில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். போகும் வழியில் உள்ள காவல் நிலையத்தில் இறங்கி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தெளிவான நிலையில்தான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டேன் என்றால் தெளிவாக இல்லை சற்று மயங்கிய

நிலையில் இருந்தேன். மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் அன்று நாள் முழுவதும் இருந்தேன். சாட்சி மீண்டும் காலை 10.00 மணி வரை இருந்ததாக சொல்கிறார். புகார் வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் வைத்துதான் எழுதினார்கள் என்றால் இல்லை மருததுவமனையில்தான் எழுதினார்கள். நான் மருத்துவமனையில் அதிகாலை 04.15 மணிக்கு அட்மிட் ஆகி 04.45 மணிக்கு சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் வெளியில் சென்றுவிட்டதாக ஆவணங்களில் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. தொடர்ந்து நான் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் ஆமாம்.

புகார் வாக்குமூலம் போலீசார் வேறு ஒரு தாலுக்கா காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் கொடுத்த புகாரில் முதலில் என்னை யார் தாக்கினார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் அந்த நேரத்தில் சொல்லவில்லை. அதன் பின்னர்தான் சொன்னேன். சரியாக ஞாபகமில்லை. நான் மருத்துவமனையில் அட்மிட் ஆனபோது மருத்துவர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். மருத்துவர் என்னை விசாரித்தபோது 10 தெரியாத நபர்கள் தாக்கியதாக சொல்லி

உள்ளேன் என்றால் ஆம் 10 பேர் என்று சொன்னேன். 10 நபர்களில் எத்தனை நபர்கள் கத்தியால் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஒரே ஒருவரைத்தான் சொன்னேன். ஒரு நபர் என்னை கத்தியால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரியாக நினைவில்லை. உண்மையை மறைக்க ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் தொடர்ந்து நான் சிகிச்சை எடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

புகார் வாக்குமூலத்தில் என்ன காரணத்திற்காக தொடர்ச்சியாக சிகிச்சை எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சா.பொ.1 கத்தி என் கடையில் நாங்கள் பயன்படுத்தும் கத்திதான் என்றால் சரிதான். கடையிலிருந்து காவல் நிலையம் 3 கி.மீ தொலைவில் உள்ளது. முதலில் இரவு 12.30 மணிக்கு நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. கார்த்திக், தாஸ், மற்றொரு கார்த்திக், ஏழுமலை, மற்றொரு ஏழுமலை ஆகியோர்கள் கடையில் இருந்தோமா என்றால் ஆமாம்.

அந்த சமயத்தில் கடையில் சிசிடிவி கேமரா இரண்டு இருந்தது என்றால் சரிதான். அந்த சிசிடிவி கேமரா பதிவை பார்த்தால் யார் தவறு செய்தார்கள் என்று விவரம் தெரியும் என்றால் சரிதான். சிசிடிவி கேமரா பதிவை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை.

அந்த நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நடந்திருந்தால் சிசிடிவி கேமரா பதிவை கொடுத்திருப்பேன் என்றும், ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் விடியற்காலை 04.00 மணிக்கு மேல் 08.30 மணிக்குள் பெறப்பட்டது. யார் யாரை விசாரித்து பெயரை தெரிந்துக்கொண்டேன் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. புகாரில் மூன்று நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சாட்சி தாமாக முன் வந்து வந்தது 10 நபர்கள் ஆனால் தாக்கியது இவர்கள்தான் என்கிறார்.

என்னை யார் தாக்கினார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் பெயர் குறிப்பிடவில்லை. காயம்பட்டு நான் சிகிச்சைக்கு சென்றபோது கார்த்திக் மற்றும் கஜேந்திரன் என்பவர்கள்தான் உடன் வந்தார்களா என்றால் கஜேந்திரன் வரவில்லை, கார்த்திக் வந்தார். புகார் வாக்குமூலத்தில் எல்லாரும் ஓடிவிட்டார்கள் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

என் உடன் இருந்த ஐந்து நபர்கள் மருத்துவமனைக்கு வந்தார்களா என்றால் கார்த்திக் மட்டும்தான் வந்தார் மீதி யாரும் வரவில்லை. இரவு நேரம் 02.30 மணி என்பதால் தூக்க கலக்கத்தில் இருந்தேன் என்றால் சரிதான். டோல்கேட்டில் பணியாளர்கள் இரவு நேரத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தார்களா என்றால் ஆமாம்.

சத்தம் கேட்டு அவர்கள் யாராவது வந்தார்களா என்றால் யாரும் வரவில்லை, அதன் பின்னர்தான் வந்தார்கள். எங்களை தாக்கியவர்கள் காரில் ஏறிதான் போனார்கள் என்றால் ஆமாம். டோல்கேட் தாண்டி காரில் ஏறி போனார்கள். அந்த கார் டோல்கேட் தாண்டி போனது என்றால் அந்த கார் டோல்கேட் தாண்டி நிறுத்தி வைத்திருந்தார்கள். அதன் பின்னர் அதில் ஏறி போனார்கள். இரவு நேரத்தில் கடையை பூட்டிவிட்டுதான் படுத்திருந்தோம் என்றால் அந்த கடையை பூட்ட முடியாது. அது திறந்த வெளி கடைதான். நான் சொன்ன நேரத்தில் லைட் வெளிச்சம் இருந்தது என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சரியாக நினைவில்லை. லைட் ஆப் செய்துவிட்டு தூங்கிக்கொண்டிருந்தோம் என்றும் இருட்டில் யார் அடித்தார்கள் என்று தெரியாது என்றும் நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

கடைக்கு முன்பு இரண்டு காட்டுவா மரம் உள்ளது என்றால் சரிதான். கடைக்கு எதிர்பக்க ரோட்டில் 27 பனைமரங்கள் வரிசையாக உள்ளது என்றால் சரிதான். கடைக்கு பின்னாடி ஒரு மலை உள்ளது என்றால் சரிதான். வேலூரிலிருந்து விழுப்புரம், திருவண்ணாமலை போகிறவரக்ள் அந்த பாதையை கடந்துதான் போக வேண்டும் என்றால் ஆமாம். சம்பவத்தை நேரடியாக யார் யார் பார்த்தார்கள் என்ற விவரத்தை புகார் வாக்குமூலத்திலும் போலீசார் விசாரணையிலும்

சொல்லவில்லை என்றால் சரியாக நினைவில்லை. கடை உள்ள சாலையில் வாகன நடமாட்டம் எப்போதும் இருந்துக்கொண்டேதான் இருக்கும் என்றால் சரிதான். கடைக்கு அக்கம் பக்கம் உள்ள கடைகளை இரவு நேரத்தில் 08.00 மணிக்கு பிறகு மூடிவிட்டு சென்றுவிடுவார்கள் என்றால் இல்லை இரவு 10.00–11.00 மணிக்கு மூடிவிட்டு போவார்கள். கடைக்கு எதிர் பக்கத்தில் உள்ள ஐயனார் கடைக்கு பக்கத்தில் ஒரு தெரு போகிறது என்றால் சரியாக தெரியாது. கடைக்கு பின்புறம் மலையடிவாரத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த நபர் சத்தம் கேட்டு வந்து பார்த்தாரா என்றால் இல்லை.

போலீசார் விசாரணையில் இரவு 02.45 மணிக்கு கடை திறந்திருந்ததா மூடியிருந்ததா என்று சொல்லவில்லை என்றால் நான் கடையில் இருந்ததாகத்தான் சொல்லியுள்ளேன் திறந்திருந்ததா மூடியிருந்ததா என்று சொல்லவில்லை. ஆஜர் எதிரிகள் மூவரையும் இப்போதுதான் நான் முதல் முறையாக பார்க்கிறேன் என்றால் சண்டையின்போது பார்த்ததேன் அதன் பின்னர் இன்றுதான் பார்க்கிறேன்.

போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகளின் அங்க அடையாளங்கள் பற்றி சொன்னேனா என்றால் சரியாக நினைவில்லை. போலீசார் என்னை என்று விசாரித்தார்கள் என்றால் அன்றே விசாரித்தார்கள். நேரம் சரியாக நினைவில்லை.

போலீசார் என்னை விசாரித்து கம்ப்யூட்டரில் டைப் செய்தார்களா என்றால் இல்லை. எதிரிகளை காண்பித்து விசாரித்தார்களா என்றால் சரியாக நினைவில்லை. சம்பவமே நடக்கவில்லை என்றும் நடந்திருந்தால் நினைவில் இருந்திருக்கும் என்றும் சம்பவம் நடக்காததால் நினைவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக வேண்டி சா.பொ.1 கத்தியை கடையிலிருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. கடையிலிருந்து போலீசார் கத்தியை எடுத்துக்கொண்டு போனார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.01.08 17:14:31 +0530